# நமது சபைக்கும் மலேசியா தேசத்திற்கும் ஜெபிக்க ஓர் அழைப்பு

**********

## *அறிமுகம்*

*கிறிஸ்தவர்களாகவும் தேவ ஜனங்களாகவும் மலேசியாவில் இருக்கும் நாம்*

- நமது பிரியமுள்ள தேசத்திற்கு ஜெபிக்க வேண்டும் அப்பொழுதுதான் ஆபகூக் 2:14ன்படி *"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி **கர்த்தருடைய** மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்".*

*கிறிஸ்தவர்களாகவும் தேவ ஜனங்களாகவும் மலேசியாவில் இருக்கும் நாம்*

- எரேமியாவின் மூலம் தேவன் தம் ஜனங்களிடம் பேசிய நான் *"உங்களைச் சிறைப்பட்டுப்போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் **கர்த்தரை** விண்ணப்பம்பண்ணுங்கள்; அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும்"* எனும் செய்தியை, இன்றைக்கும் அந்த வார்த்தை நமக்குரியது என விசுவாசிக்க முடியும் (எரேமியா 29:7).

## I. திருச்சபை - பரிசுத்தம், எழுப்புதல் பெற்ற அதீதமானது

### 1. தேவனை ஜெபத்தில் தேட நம்மை தாழ்த்துவது

அப்போஸ்தலர் 1ல் எப்படி 10 நாள்கள் ஜெபத்திற்குப் பின்னர் பெந்தெகோஸ்தே நாளின்போது பரிசுத்த ஆவியின் நிறைவுதல் காணப்பட்டது என்பதை வாசிக்கிறோம். அது போல உற்சாக மற்றும் இடைவிடா ஜெபம் உலகத்தையே கலக்குகிற அளவிற்கு பெரும் எழுப்புதலில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. அது போல 1727ல் மொரேவியன் எழுப்புதல், 18ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் பெரிய எழுப்புதல், 1904ன் வெல்ஷ் எழுப்புதல், 1906ல் அசூசா சாலை எழுப்புதல் 1907ல் கொரியன் எழுப்புதல் வந்தன.

நமது அருகாமையில் எஸ்.ஐ.பி.யின் எழுப்புதல் அலை தொடர்ச்சியான ஜெபத்தாலும் பரிசுத்த ஜீவியத்தாலும் அனுபவிக்கப்பட்டன. இதன் அடிப்படையில், பத்து இருபது ஆண்டுகளில் தேசத்தில் மிகவும் துரிதமாகவும் பூர்வீக சமூகத்தினர் மத்தியில் சபைகள் வளர்ந்ததும் அதின் தொடர்ச்சியில் முழு உருமாற்றம் உண்டானதுமாயிற்று.

அ. மலேசிய சபைகள் தேவன் முகத்தை ஒருமனப்பட்டுத் தேடி, ஊக்கமுடனும் விடாமுயற்சியுடனும் ஜெபிக்கும் பட்சத்தில் தேவன் வானத்தைத் திறந்து, தமது மகிமையை வெளிப்படுத்தி, நமது தேசத்தில் அவரது வல்லமையை ஊற்றுவார். *என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்"* எனும் 2 நாளாகமம் 7:14ஐக் கோருவோமாக..

### 2. சபையில் பரிசுத்தத்தையும் நீதியையும் வலியுறுத்துதல்

உத்தரவாதமுள்ள அதீத ஜீவியத்தின் மூலம் மாத்திரமே மலேசிய சபையானது தீர்க்கதரிசன திருச்சபையாகவும் சமூகத்தில் தாக்கத்தை உண்டுபண்ணுகிறவர்களாகவும் காணப்படும். அப்பொழுதுதான் நமது சபைகள் மதிப்புடனும் நெறியுடனான அதிகாரத்துடனும் உலகத்தால் தீவிரமாக கருதப்படும்.

அ. போதகர்கள், சபைத் தலைவர்கள், விசுவாசிகள் என தெய்வீக வாழ்க்கையை இல்லத்திலும், சபையிலும், சந்தை வெளியிலும், பொது இடங்களிலும் வாழத்துடிக்க ஜெபியுங்கள்.

ஆ. நமது திருச்சபை பரிசுத்தத்தைக் குறித்து முறையான போதனையை பிரசங்கத்திலும், சிறு குழுக்களிலும், எல்லா நிலைகளிலான சபை ஊழியங்களிலேயும் போதிக்க ஜெபிப்போம்.

## 3. சபை ஒற்றுமை மற்றும் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை மேம்படுத்துதல்

நாம் வாழும் சமூகத்தில் இனத்துவேஷங்களும் பேதங்களும் அதிகமாய் சீர்கெட்டிருக்கின்றன. ஆனால் திருச்சபையிலோ சிலுவையின் வழியாக சாமாதானமும் ஒற்றுமையையும் அருளியுள்ளார் (எபே 2:14)

அ. கிறிஸ்தவ சமூகங்கள் மத்தியில் ஒற்றுமையின் ஆவியைக் காத்துக்கொள்ளவும் ஒப்புரவாக்குதலை அணைத்துக்கொள்ளவும் கிறிஸ்தவர்கள் பிரயாசம் எடுக்க ஜெபி.

ஆ. கிறிஸ்தவத் தலைவர்களும், ஸ்தல சபைகளும் மற்றும் எல்லா பிரிவு சார்ந்த சபையினரும் மன்னிப்பிலும் ஒப்புரவாக்குதலிலும் ஒற்றுமையுடன் ஜீவித்து ஒப்புரவாக்குதலில் முன்னோடியாகத் திகழ ஜெபி.

## 4. சீஷத்துவத்தின் விலையைக்குறித்து கிறிஸ்தவர்களுக்கு போதனை

உண்மையான *சீஷ*னாக வாழுவதற்கு ஒரு கிரயத்தை கொடுக்க வேண்டும் என இயேசு கற்பித்ததை தவறாமல் கற்றுக்கொடுக்க வேண்டும் (லூக்கா 9:23). பெருமளவில் நம் நாட்டைவிட்டு வெளிநாட்டிற்கு குடியேறி அதின் விளைவாக நமது சபை பலவீனப்பட்டும் தேசிய மேம்பாட்டிற்கு நமது பங்களிப்பை தராமல் போனதும் ஒரு தோல்வியாகும்.

அ. கிறிஸ்தவர்கள் உண்மையான *சீஷ*த்துவத்தின் கிரயத்தை புரிந்து கொள்ளவும், தங்களது சிலுவையை எடுத்து கிறிஸ்துவுக்காக அனுதினமும் பாடுபடவும் ஜெபி.

ஆ. அயல்நாட்டில் நிபுணத்துவத்திற்கு பயிலும் கிறிஸ்தவர்கள் ஒரு தெளிவான தரிசனத்துடன் தாயகம் திரும்பி சபையையும் தேசத்தையும் கட்டும்படி ஜெபி.

இ. கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தாயகம் திரும்பி மலேசியாவில் தேவனை சேவிக்க உற்சாகப்படுத்தும்படி ஜெபி.

## 5. நமது சபைகளில் தெய்வீக தலைமைத்துவத்தை மேம்படுத்துதல்

கிறிஸ்து போல சேவகனாக ஊழியம் செய்யும் தெய்வீகத் தலைவர்கள் இந்த நாட்களில் அவசியம் தேவை. மேலும் பவுல் தீமோத்தேயுவுக்கு *"மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி"* (2 தீமோ 2:2) என ஆலோசனை சொல்லுகிறது போல நாமும்கூட நமது இளைய தலைமுறையினரை *சீஷ*த்துவத்தில் வழி நடத்த வேண்டும்.

அ. கிறிஸ்துவின் உண்மையான மேய்ப்பர்களாகுவதற்கு சபைப் போதகர்களும் தலைவர்களும் ஆழமாய் வளர ஜெபி. அவர்கள் தேவ வார்த்தைகளுக்கு தாகிக்கவும், தேவ சத்தியத்திற்கு உறுதியாய் ஒப்புக்கொடுத்து அதின்படி ஜீவிக்கவும், தங்களின் மந்தைகளை அவ்விதமாகவே போதித்து ஊக்குவிக்கவும் ஜெபி.

ஆ. தற்கால தலைமைத்துவ சந்ததி நம் தேசத்தின் சபைகளுக்கும் கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்கும் உறுதியான அஸ்திபாரத்தை போட்டு, தெய்வீக மற்றும் தாழ்மை சேவகத்தை முன்மாதிரியாக்கவும் வெற்றி கொணரும் திட்டங்களை நிர்வகிக்கவும், வருங்கால இளைஞர் தலைமத்துவத்திற்கு மாற்றல் செய்யவும் ஜெபி.

### 6. கிழக்கு மலேசியாவின் பூமிபுத்ரா சபைகளை வலுவூட்டுதல்

2010 அரசாங்க கணக்கெடுப்பின்படி பூமிபுத்ரா கிறிஸ்தவர்கள் மலேசிய சபைகளில் 65% இடம்பிடித்துள்ளனர். இவர்கள் பொருளாதாரத்தில் பலவீனர்களாகவும் போதுமான அளவில் போதனை உபகரணங்கள் இல்லாமலும் இருக்கின்றனர். ஒரு சில பிரிவினர் அவர்களது உறுப்பினர்களை தங்கள் பக்கமாக இழுத்துகொண்டு விடுகின்றனர். கிறிஸ்தவ மார்க்கத்திலும், அவர்களது சுதந்தரவீதத்திலிருந்தும் அநேக பிள்ளைகளும் வாலிபர்களும் மதம் மாற்றப்படுகின்றனர்.

அ. மலாய் மொழியில் அதிகம் வேதாகமப் புத்தகங்களும் சீஷத்துவ போதனா உபகரணங்களும் கிடைக்கப்பெற ஜெபி.

ஆ. மேற்கு மற்றும் கிழக்கு மலேசிய ஊழியங்களில் பங்காளித்துவம் பெற்று நல் விளைவுகளின் பலனில் வளர ஜெபி

இ. பலமான பூமிபுத்ரா சபைகளும் தைரியமுள்ள தேவனுக்கு பயந்த தலைவர்கள் அவர்களுக்குள் எழும்பவும் ஜெபி

## II. பொருளாதாரம் - வலுவான & வளருகிற, எல்லாருக்கும் சம அளவில் பகிர்ந்தளிக்கப்பட

### 7. நமது தேசத்தில் உப்பாகவும் ஒளியாகவும் ஜீவிக்க

எரேமி 29:7ன்படி தேசத்தின் சமாதானத்தை தேடு எனும் அறைகூவலை நிறைவேற்ற வேண்டுமானால் நமது தேசத்தின் பொருளாதார விவகார மேம்பாடுகளில் அமைதலாகவோ, நடுநிலை வகிக்கவோ அக்கரைப்படாமலோ இருக்க முடியாது.

அ. தேவன் தொடர்ந்து நமது தேசத்தின் வலுவான தொடர்ந்த நிலையில் தேசிய பொருளாதாரத்தை உயர்த்தவும் எல்லா குடிமக்களும் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். எல்லா இனத்து மக்களிடையே சமமான ஐசுவரியம் பகிர்ந்தளிக்கப்பட ஜெபியுங்கள்.

ஆ. தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு கேடு விளைவிக்கிற மேலும் தவறாய் அமுல் படுத்துகிற கொள்கை மற்றும் அதில் நடக்கிற ஊழல்கள்-இவற்றிற்கு எதிராக ஜெபியுங்கள்.

சிறுபான்மை சமூகத்தினர் ஓரங்கட்டப்படாமல் இருக்க ஜெபி. குறிப்பாக சபா சரவாக் பூர்வீகத்தினரின் நலன் மற்றும் ஓராங் அஸ்லியின் உரிமைகள் பறிக்கப்படாமலும் அவர்களது பூர்வீக நில சொத்துகள் பாதுகாக்கப்படவும் ஜெபி.

அன்பும் உருக்கமும் கொண்ட நடக்கையினால் ஏழைகளையும் அகதிகளையும் வெளிநாட்டு வேலைக்காரர்களையும் இன மத வேறுபாடின்றி பராமரிப்பதில் சபை முன்னோடியாயிருக்க ஜெபி

## III. நிலைத்தன்மையுள்ள, ஊழலில்லாத ஜனநாயகமான நீதி நிறைந்த அரசியலும் அரசாங்கமும்

### 8. கூட்டரசு உயர்மன்ற அரசியலமைப்பை நிலை நாட்டுவதும், மனித உரிமையை பேணுவதும்.

கூட்டரசு உயர்மன்ற அரசியலமைப்பை நிலை நாட்டுவது, மனித உரிமையை பேணுவது, ஜனநாயக கொள்கை மற்றும் தேசத்தின் சட்டதிட்டங்களை பாதுகாப்பது என்பது மிகம் நெருக்கடியான நிலையை எட்டியுள்ளது. மற்ற நம்பிக்கையாளர்களையும் அவர்களது மத நம்பிக்கையையும் தொடர்ச்சியான முயற்சிகளில் கீழ்ப்படுத்தி, குறிப்பாக இஸ்லாமியப்படுத்தும் நோக்கத்தைக்கொண்டிருப்பதே இதற்கு காரணமாகும்.

அ. சமய சுதந்திரம் நிலைநாட்டும்பொருட்டு சபைகளும், சிவில் சமூகமும், குடிமக்களும் கூட்டரசு அரசியலமைப்பையும் குடிமக்களுடைய சுதந்திரத்தையும் தற்காக்க எழும்பும்படி ஜெபி

ஆ. சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள், 'அல்லாஹ் எனும் வார்த்தையின் சர்ச்சைகள், பிள்ளைகள் பராமரிப்பதில் எழும்பிய சிக்கல்கள், முஸ்லிம் அல்லாத வழிபாட்டுத்தளங்கள் மீதும் வேதாகமங்கள் மீது ஆதிக்கம் செய்ய விழைகிற அரசு மேலதிகாரிகளின் நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு எதிராக ஜெபியுங்கள்.

இ. அண்மைய காலமாக நடந்து வருகிற இன, சமய, கலாச்சாரத்தை ஒடுக்கி ஒரு சாராரே மேலோங்கச்செய்கிற  பிரித்தாளும் கொள்கைகள் நீங்கி, அனைத்து இனத்தைச் சார்ந்த குடிமக்களின் சமஉரிமைகள் பாதுகாக்கப்பட ஜெபி. மதத்தின் பெயரால் ஆதிக்கம் செலுத்த விரும்புகிற அழுத்தங்களுக்கு எதிராக ஜெபி இல்லாவிடில் அது தேசத்தின் அஸ்திபாரத்தையே அழித்து விடும்.

ஜனநாயக செயலாக்கம், மற்றும் ஒழுங்கமைப்பு ஸ்தாபனங்கள் முதிர்ச்சியடைந்து புத்துயிர்பெற்று நம் நாட்டில் இயங்கவும் ஜெபி. குறிப்பாக நாடாளுமன்றம், சட்டமன்றம், நீதித்துறை மற்றும் அரசு ஊழிய சேவைகள்.

## 9. திறம் வாய்ந்த, உண்மையான, நேர்மைக்கும் நீதிக்கும் தலைவணங்குகிற அரசியல்வாதிகளை தெரிவு செய்தல்.

எந்தவொரு அரசியல் கட்சிகளுடனும் இணையாமல் செயல்படுகிற சபைகளாக விளங்காமற்போனாலும், மக்களை பிரதிநிதிக்கிற ஒரு தலைவரை தெரிந்தெடுக்கும்போது அவர்களது உண்மைத்துவம் மற்றும் மக்களுக்கு சேவை செய்கிறவர்களாக இருப்பதை உறுதி செய்ய வேண்டுமே தவிர நீதி நியாமில்லாத நேர்மையல்லாதவர்களை அல்ல.

அ. பரிவு, நேர்மை, நீதி நியாயம் நிறைந்தவர்களாய் தேசத்தை ஆட்சி செய்கிறவர்களைத் தெரிந்தெடுக்க ஞானமும் பகுத்தறிவும் கொண்டவர்களாய் குடிமக்கள் காணப்பட ஜெபி.

ஆ. வாக்காளர்களாக தங்கள் பங்கினை செலுத்தும் பொறுப்புள்ள கிறிஸ்தவர்களாக இருக்க ஜெபி.

## 10. முன்மாதிரியான தேசமாக மலேசியா விளங்க

நமது சந்ததியில், தேவனால் பயன்படுத்தப்பட்டு வலிமையான உருமாற்றத்தையும் நமது மண்ணில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஆசீர்வாதத்தை கொண்டு வரும் முன்னோடிகளை நமது மலேசிய திருச்சபைகள் கொண்டிருக்கின்றன.

அ. தேவ கிருபையினால், மலேசியா, பொருளாதார ரீதியில் ஒரு மேம்படைந்த நாடகவும், நிலைத்தன்மை மற்றும் சுபீட்சமான ஜனநாயகத்தைக்கொண்டிருந்து அனைத்து குடிமக்களும் சமமாக எண்ணப்பட்டு, அடிப்படை சுதந்திரம் காக்கப்பட்டவர்களாய், பலவீனர்களும் எளியவர்களும் அரசியலமைப்பின் அடிப்படையில் நீதி விளங்கப்பட ஜெபி. இது, மலேசியா ஒரு முன்மாதிரியான நாடு என விளங்கச்செய்யும்.

**********

## *முடிவுரை*

மலேசியாவில் கிறிஸ்தவர்களாகவும் தேவ ஜனங்களாகவும் வாழ்கிற நாம், நமது நாடு ஆசீர்வாதமுள்ள நாடாகத் திகழும் நம்பிக்கையில் ஜெபிப்போம்.

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை, உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. (எரேமியா 29:11).